## கே.எம்.சி.எச். மருத்துவமனையில்

# கழுத்து வீக்கம் கட்டிக்கு அதிநவீன அறுவை சிகிச்சை



டாக்டர் எம்.திவாகர்

கோவை.ஆக.10 கல்லூரி மாணவி ஒருவர் கழுத்தில் வலது பக்கமாக சிறிய வீக்கம் இருந்ததை பொருட்படுத்தவே இல்லை. வீக்கம் நாளடைவில் பெரிதாகவே, தனது தோழியின் அறிவுரைப்படி கே.எம்.சி.எச். மருத்துவமனைக்கு வந்து, காது, மூக்கு தொண்டை சிகிச்சை நிபுணரும், கழுத்து பகுதி அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் எம்.திவாகர் அவர்களை சந்தித்தார். ஸ்கேன் மற்றும் பயாப்ஸி பரிசோதனையில் உமிழ் நீர் சுரப்பியில் கட்டி எனத் தெரிய வந்தது. மிகவும் கவனமான ஒரு அறுவை சிகிச்சை மூலம் இந்த கட்டி அகற்றப்பட்டது. முக இயக்கங்களை கட்டுப்படுத்தும் முக நரம்பு சிதைத்து விடாமல் முழு எச்சரிக்கையோடு, இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பரிபூர்ணமாக குணமடைந்து மாணவி வீடு திரும்பினார்.

இது குறித்து டாக்டர் திவாகர் கூறியதாவது. இது சாதாரண கட்டியாக இருந்தது மீனாவின் அதிர்ஷ்டம் தான். பெரும்பாலும் கழுத்து பகுதி கட்டிகள் புற்றுநோய் கட்டிகளாக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. உமிழ்நீர் சுரப்பியிலும், தைராய்டு சுரப்பியிலும் வரும் புற்றுநோய் இது போல கழுத்து பகுதி வீக்கமாகத் தான் வெளிப்படும். வாய், தொண்டை, குரல்வளை புற்றுநோய்கள் கழுத்து பகுதியில் பரவி வீக்கமாகவோ, கட்டியாகவோ தென்படும். இதற்காக, கழுத்து பகுதி வீக்கம் பற்றி, புற்றுநோய் தான் என அஞ்ச தேவையில்லை. அது சாதாரண கட்டியின் வீக்கமாக இருக்கலாம். கிருமி தொற்றால், நீணநீர் முடிச்சுகள் வீங்கி. கழுத்து பகுதியில் வீக்கமாகலாம். 2 அல்லது 3 வாரங்களுக்குள் இது சரியாகாவிட்டால், வீக்கம் வடிந்திராவிட்டால், உடனடியாக சிறப்பு மருத்துவரை அணுக வேண்டும். வலியுடன் கூடிய வாய்ப்புண், தொண்டை புண், குரலில் மாற்றம்; விழுங்குதலில் சிரமம் ஆகியவை 3 வாரங்களுக்கு மேல் நீடித்தால் புற்றுநோயின் அறிகுறியாக இருக்க கூடும்.

கே.எம்.சி.எச்.-சில் அதி நவீன மருத்துவ தொழில்நுட்பம் மூலம் தைராய்டு, கழுத்து, வாய், தொண்டை பகுதிகளில் ஏற்படும் கட்டிகளை அகற்ற முடியும். அதிநவீன எண்டோஸ்கோப்புகள், லேசர் சிகிச்சைகள் மூலம் மூக்கு, தொண்டை பகுதியிலுள்ள சிறிய கட்டிகளை அகற்றலாம். தழும்பில்லாத, சிறப்பான சிகிச்சை இது. ஆரம்ப கட்ட புற்று கட்டிகளோடு அடுத்த நிலை கட்டிகளையும் ஒருங்கிணைந்த சிகிச்சைகள் மூலம் அகற்றலாம். தலை மற்றும் கழுத்து பகுதி சிறப்பு புற்றுநோய் சிகிச்சை துறை, கே.எம்.சி.எச்.-சில் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் துவங்கப்பட்டது. இது வரை 120-க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு டாக்டர் திவாகர் கூறினார்.